**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.28/2018**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முனுசாமி | மதம் | : இந்து |
| த/பெ | : துரை (எ) துரைகண்ணு | ஜாதி | : -- |
| வயது | : 55 | கிராமம் | : காவேரிராஜபுரம் காலனி |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**19.11.2025**
**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு படித்துள்ளேன். விவசாயம் செய்து வருகிறேன். நான் காவல் துறையில் என்ன பணியில் இருந்தேன் என்றால் ஊர்காவல் படையில் இருந்தேன். தற்போது இல்லை. நான் தகராறு செய்ததாக என் மீது சங்கர் புகார் கொடுத்த பின்புதான் என்னை ஊர்காவல் படையில் இருந்து எடுத்தார்கள் என்றால் ஆமாம். வழக்கு சொத்து ஆதியில் என் தாத்தா குப்பனுக்கு சொந்தம் என்றால் சரிதான். குப்பனுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் மொத்தம் 4 ஆண் பிள்ளைகள். 2 பெண் பிள்ளைகள். வாதியின் அப்பா முனுசாமி, என் அப்பா துரை, பெரியப்ப சந்திரன், மற்றொரு பெரியப்ப சின்ன முனுசாமி, அத்தைகள் கமலா, ஜெயம்மாள் ஆகியோர்கள் ஆவார்கள்.

2. வழக்கு சொத்தின் புல எண் என்ன என்றால் பழைய புல எண்.105/11 ஆகும். எங்களுக்கும் என் பெரியப்பா சின்ன முனுசாமிக்கும் புல எண்.105/11பி ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வாதியின் அப்பாக்கும் சந்திரகேஷுக்கும் புல எண்.105/11A ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சந்திரகேஷுக்கும் முனுசாமிக்கும் கூட்டு பட்டா இருந்தது என்றால் சரிதான். பழைய கூட்டு பட்டா எண்.390 என்றால் சரிதான். என் அப்பா மற்றும் சின்ன முனுசாமி பெயரில் இருந்த பழைய பட்டா எண் என்ன என்றால் பட்டா எண்.391 ஆகும். வாதி அவர் அப்பா பாகத்தில் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு வந்த பாகத்தை நான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். சின்ன முனுசாமிக்கு குழந்தைகள் இல்லாததால் அவரது

பாகத்தையும் நான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். சந்திரன் பாகத்தில் வீடு கட்டி சந்திரன் குடியிருந்தார் என்றால் அவரது பாகத்தில் நாங்கள்தான் வீடு கட்டியிருந்தோம். அவர் பெங்களூரில் இருந்தார்.

3. சந்திரன் பாகத்தில் சந்திரன்தான் வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தின் தெற்கே வாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் வடக்கே துரைகண்ணுவின் இடமாக இருந்து நாங்கள் வாங்கியுள்ளோம் என்றால் நாங்கள் வாங்கவில்லை. துரைகண்ணு இடம்தான். துரைகண்ணு இடத்தில் என் தம்பி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். கிழக்கு பக்கம் எனது பாக சொத்து உள்ளது என்றால் சரிதான். மேற்கு பக்கம் ராகவேலு இடம் உள்ளது என்றால் சரிதான். சந்திரகேஷ் எப்போது இறந்தார் என்றால் 2015ல் இறந்தார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 ஆவணத்தில் பக்கம் 20ல் உள்ள வரைபடத்தில் உள்ளவாறுதான் புல எண்.11A, 11B பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 11ல் **"என் பெரியப்பா என் தந்தையிடம் தாவா சொத்தினை உனக்கே கிரையம் கொடுத்துவிடுகிறேன் என்ற பலமுறை சொல்லியுள்ளார் என்ற விவரம் என் தந்தை சொல்லி எனக்கு தெரியும்"** என நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை நான் என் வழக்கறிஞரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். என் பெரியப்பா என் அப்பாவிற்கு கிரையம் கொடுப்பதாக சொன்ன விவரம் எனக்கே நேரடியாக தெரியும். 2012ல்தான் என் அப்பாவிற்கு கிரைய ஆவணம் எழுதிகொடுத்ததாக சொல்கிறேன் என்றால் அது கிரைய ஒப்பந்தமாகும். 2012ல் ஆவணம் எழுதி கொடுத்ததாக சொல்வதில் இன்றுவரை என் பெரியப்பாவிற்கோ அவரது வாரிசுகளுக்கோ வழக்கறிஞர் அறிவிப்போ கடிதமோ அனுப்பினேனா என்றால் இல்லை.

5. இதுவரை சந்திரகேஷ் மீது சொத்தை கிரையம் எழுதி கொடுக்க சொல்லி வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1 வரி ரசீது என்ன தேதி என்றால் 08.09.2007 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1 மற்றொரு வரி ரசீது என்ன தேதி என்றால் 31.03.2017 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள 31.03.2017ம் தேதியிட்ட வரி ரசீதில் என்ன வரி விதிப்பு எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 105/11A ஆகும். அதில் உள்ள கதவு எண் என்ன

என்றால் 296/3A ஆகும். என் தந்தை 2012ல்தான் ஒப்பந்தம் செய்துள்ள நிலையில் அதற்கு முன்பே எங்கள் பெயருக்கு வீட்டு வரி ஏற்பட வாய்ப்பே இல்லை என்றாலும் இது எங்கள் பாக சொத்திற்கான வீட்டு வரி ரசீது என்றாலும் சரியல்ல. அதற்கு முன்பே வீட்டு வரி போட்டுவிட்டோம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 4 வீட்டு வரி ரசீது என்ன தேதி என்றால் 31.04.2017 ஆகும்.

6. வாதி அவரது பாக வீட்டிற்கு வரி ரசீது வாங்கியுள்ள அதே தேதியில் நாங்கள் எங்கள் பாகத்திற்கு வரி ரசீது வாங்கிவிட்டு அதை வழக்கு சொத்திற்கானது என பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 4ல் என்ன தொகை விதிக்கப்பட்டுள்ளது என்றால் ரூ.55 ஆகும். பி.வா.சா.ஆ 1ல் என்ன தொகை விதிக்கப்பட்டுள்ளது என்றால் ரூ.54 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 2 மின் இணைப்பு 1995ம் வருடத்திற்குரியது என்றால் சரிதான். என் தந்தை 2012ல்தான் ஒப்பந்தம் செய்துள்ள நிலையில் அதற்கு முன்பே எங்கள் பெயருக்கு மின் கட்டணம் ஏற்பட வாய்ப்பே இல்லை என்றாலும் இது எங்கள் பாக சொத்திற்கான மின் கட்டணம் ரசீது என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படுவது என்மீது மின்வாரியத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான உத்தரவு என்றால் என் மீது புகார் கொடுக்கப்பட்டது. ஆனால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. என் வீட்டில் இருந்து மின் இணைப்பை தாவா சொத்தில் தவறாக பயன்படுத்தியதற்கு என் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான உத்தரவுதான் என்மீது காண்பிக்கப்படுவது என்றால் என் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

7. இளநிலை உதவியாளர், கிராம நிர்வாக அலுவலர் எங்கள் இடத்திற்கு வந்து என்னை விசாரித்தார்கள் என்றால் கிராம நிர்வாக அலுவலர் வரவில்லை. மின்வாரியத்தில் இருந்து இளநிலை உதவியாளர் மட்டும் வந்தார். என்னை யாரும் விசாரிக்கவில்லை. எனது பாகமான புல எண்.105/11B ல் உள்ள வீட்டில் இருந்து மின் இணைப்பை புல எண்.105/11A க்கு தவறாக பயன்படுத்தியதை கண்டித்ததாக மின்வாரிய இளநிலை உதவியாளர் 29.12.2017ல் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் இல்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)